# மன்னார் பிரதேச சபை

## மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 25 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 20 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 ஜனவரி 27 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, மன்னார் பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மன்னார் பிரதேச சபையின் நிலைவரத்தையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்படடிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக்கூற்றுக்கள் மீதான தாக்கம் | சொத்துக்கள் | | வருமானங்கள் | | செலவினங்கள் | | பொறுப்புகள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுதி (ரூபா) | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி (ரூபா) |
| குறைத்துக் கூறல்கள் | 03 | 1,812,203 | - | - | - | - | 01 | 2,431,962 |
| அதிகரித்துக் கூறல்கள் | 01 | 598,490 | 02 | 12,384,430 | 01 | 98,713 | - | - |

### 1.3.2 கணக்காய்வுக்குச் சான்றுகள் இன்மை

கணக்காய்விற்குத் தேவையான தகவல்களும் சான்றுகளும் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 7,546,715 பெறுமதியுடைய 03 மீதிகளை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் IX விதி 180 களஞ்சியம் என்பவற்றுக்குப் பொறுப்புள்ள அலுவலரிடம் பிணைப் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III விதி 59 வியாபார வரி சம்மந்தமாக கணிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்குவிதி அத்தியாயம் III விதி 65 அரசிறை எழுதுனர் வியாபாரஉரிமம் சம்மந்தமாக அரசிறை எழுதுனர் தவறுநர் நிரல் தயாரித்து செயலாளரிடம் ஒப்படைக்கவில்லை.

(ஈ) 1988ஆம் ஆண்டின் நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் III விதி 81 ஒவ்வொரு காலாண்டு இறுதியிலும் காணிக் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமான முத்திரைத் தீர்வைகள் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணங்களில் மீளளிப்பு சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கத் தவறியமை.

(உ) 1988ஆம் ஆண்டின் பிரதேச சபை நிதி, நிர்வாக ஒழுங்கு விதி அத்தியாயம் VII விதி இலக்கம் 166 பிரதான பேரேட்டிற் பதிதற் பொருட்டு குறிப்புப் புத்தகம் ஒன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) அரச நிதி, ஒழுங்கு விதி 700 (05) ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வியின் இரண்டாம் பிரதி பொருத்தமான கேள்விச் சபை தீர்மானப் பிரதியுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளின்படி மீளாய்வு ஆண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவின மிகையாக ரூபா 20,832,084 ஆக விளைந்திருப்பதுடன் இதற்க்கு நேரெதிரான முன்னைய ஆண்டின் செயற்பாடு செலவிலும் கூடிய வருமானமாக ரூபா 26,724,430 ஆகவும் விளைந்திருந்தது.

## 2.2 நிதி முகாமைத்துவம்

வரவுசெலவுத் திட்டம் சரியான முறையில் தாயாரிக்கப்படாமையினால் செலவினங்களில் மிகையும் சேமிப்பும் வருமானங்களின் பற்றாக்குறையும் மேலதிகமும் ஏற்பட்டுள்ளது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான நிலுவை

பிரதேச சபையால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் வருமான நிலுவை தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | 31.12.2012 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | (ரூபா) | (ரூபா) | (ரூபா) |
| (i) | வீதவரிகளும் வரிகளும் | 96,253 | 297,285 | 72,301 |
| (ii) | வாடகைகள் | 3,074,648 | 3,272,882 | 918,833 |
| (iii) | உரிமங்கள் | 520,543 | 359,052 | - |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 17,859,312 | 26,388,731 | 11,710,350 |

### 2.3.2 முத்திரைத் தீர்வைக் கட்டணம்

பதிவாளர் நாயகத்திடமிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்ட முத்திரைத் தீர்வைக் கட்டணமான ரூபா 17,765,314 இனை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.3 ஏனைய வருமானங்கள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2009ஆம் ஆண்டிலிருந்து பெறவேண்டிய ஆதனவரி ரூபா 72,301 பெறப்படாமல் உள்ளதுடன் இது தொடர்பாக நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டில் அரசிறை நிலுவைகளில் நிலுவைக் குத்தகை 02 ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 918,833 காட்டப்பட்டு வருவதுடன் இது தொடர்பாக போதுமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.3. செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது 22 மூலதன செயற்திட்டங்களுக்காக ரூபா 91,774,000 ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் 08 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டினுள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

| இல | செயற்திட்டங்கள் | ஒதுக்கீடு (மில்லியன்) (ரூபா) | செலவு (மில்லியன்) (ரூபா) | செயலாற்றுகை வீதம் (வீதம்) |
|---|---|---|---|---|
| 01 | புனர்நிர்மாணம் - எருக்கலம்பிட்டி உள்ளகவீதி | 7.177 | 3.18 | 50 |
| 02 | புனர்நிர்மாணம் - பேசாலை உள்ளகவீதி | 7.177 | 4.2 | 50 |
| 03 | புனர்நிர்மாணம் - பெரியகரிசல், சின்னக்கரிசல் உள்ளகவீதி | 7.177 | 5.64 | 50 |
| 04 | நிர்மாணம் - தாழ்வுபாடு இறைச்சிக் கடை | 4.717 | 1.2 | 50 |
| 05 | புனர்நிர்மாணம் - கொல்களம், உயிலங்குளம் | 3.427 | 1.2 | 50 |
| 06 | நிர்மாணம் - விளையாட்டுமைதானம், உயிலங்குளம் | 4.0 | 1.6 | 50 |
| 07 | நிர்மாணம் - எருக்கலம்பிட்டி கலாச்சாரமண்டபம் | 5.202 | 0.8 | 50 |
| 08 | புனர்நிர்மாணம் - புதுக்குடியிருப்பு உள்ளகவீதி | 5.551 | 1 | 50 |

### 2.3.5 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபை நடவடிக்கைகள் சம்பந்தமாக போதுமானளவு உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ளவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாட்டு பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(i) வருமானச் சேகரிப்பு

(ii) நிலையான சொத்துகள்

(iii) கணக்கீடு

(iv) ஆளணி

(v) நன்கொடை

(vi) வாகனங்களின் பயன்பாடு

(vii) நானாவித வைப்புகள்

(viii) வரவுசெலவுத் திட்டம்